# பதவியை இராஜநாமாச் செய்துவிட்டுப் போராடுவேன்! கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

## கறுப்புக் கொடிப் போராட்டத்திலும் இங்குவாராம்

**எல்லைதாண்டிய இந்திய மீன்பிடியாளர்கள் விடயம் தொடர்பில் அழுத்தங்கள் இந்தியத் தரப்பிலிருந்து இலங்கை அரசின் மீது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அமைச்சுப் பதவியை இராஜநாமா செய்து எமது கடற்றொழிலாளர்களுடன் இணைந்து நியாயமான தீர்வுக்காக போராடுவேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

**இன்றையதினம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் இந்திய தூதருடனான சந்திப்பு போது கடற்றொழிலாளர் பிரச்சினை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

**இதன்போது அவர் மேலும் கூறுகையில், இந்தியத் தூதுவருடனான சந்திப்பின்போது பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் அல்லது அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாடியிருந்தேன். குறிப்பாக நான் நீண்டகாலமாக எதைக் கூறிவந்தேனோ, அதுதான் இன்று யதார்த்தமாகியுள்ளது என்றும் அதையே இன்று ஏனைய தரப்பினர் ஏற்றுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியிருந்தேன்.**

2 ➤





மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 15 செவ்வாய்க்கிழமை 27.02.2024 கதிர் 190







## விமானப் படையின் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகளை விடுவிக்க வேண்டும்!

### அங்கஜன் இராமநாதன் எம்.பி. கோரிக்கை

இலங்கை விமானப் படையின் 73ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு , வடக்கில் விமானப் படையின் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகளை விமானப் படையினர் விடுவிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்றைய தினம் இடம் பெற்ற ஊடகச் சந்திப்பின் போது, விமானப் படையின் 73ஆவது ஆண்டு நிறைவு விழா இம்முறை வடக்கை மையப்படுத்தி நடைபெறவுள்ளது. அதனை

2 ➤




## வெள்ளவத்தையில் ஹோட்டலை நோக்கி இன்று துப்பாக்கிச்சூடு

கொழும்பு, வெள்ளவத்தை பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக இன்று அதிகாலை 5.20 மணியளவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

வெள்ளவத்தை, இராமகிருஷ்ண வீதி பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் அந்தக் ஹோட்டலை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும், எவரையேனும் பயமுறுத்தும் நோக்கில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம்

2 ➤

## போலி தரச் சான்றிதழ்களுடன் மருந்து இறக்குமதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு!

“ஹியூமன் இமியூனோக்ளோபியூலின்“ தடுப்பூசியை இலங்கைக்கு இறக்குமதி செய்தமை போலவே, போலியான தரச் சான்றிதழ்களுடன் இறக்குமதி செய்யப்பட்டுள்ள “பிரெட்னிசிலோன்“ எனப்படும் மருந்து தொடர்பிலான விசாரணைகளை மருந்தாக்கல் அதிகாரசபை பதுக்கியமை தொடர்பில் முழுமையான விசாரணையொன்றை நடத்துமாறு துணை மருத்துவ நிபுணர்களின் குழு நேற்று (26 ஆம் திகதி) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

இந்த வருடம் ஜனவரியில் “பிரெட்னிசிலோன்“ எனப்படும் மருந்தை இறக்குமதி செய்வதற்காக சமர்பிக்கப்பட்டிருந்த “வோர்“ எனப்படும் போலி தரச் சான்றிதழ் மற்றும் அதனுடன் தொடர்புடைய மேலும் இரண்டு போலி தரச் சான்றிதழ்கள் தொடர்பில் மருந்தாக்கல் அதிகாரசபைக்கு புகார்கள் கிடைத்த போதிலும் மருந்தாக்கல்

2 ➤

## கொள்கலனில் மறைந்து மலேஷியா செல்ல முயன்றோர் சீனாவில் கைதாகி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் ஏற்றப்பட்ட வெற்றுக் கொள்கலனில் மறைந்து மலேசியாவிற்கு தப்பிச் செல்ல முயன்ற இரு இலங்கையர்கள் சீனாவில் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் நாடு கடத்தப்பட்டு கடந்த 24 ஆம் திகதியன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். 26 வயதுடைய ராஜேந்திரன் மற்றும் 39 வயதுடைய ஜெயகுமார் ஆகிய நபர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்களாவர்.

இந்த இரண்டு பேரும் கடந்த வருடம் (2023 ) ஜனவரி 30 ஆம் திகதியன்று கொழும்பு துறைமுகத்தில் சி.ஐ.சி.டீ தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த ‘மேர்க்ஸ் யூனிகோன்’ என்ற கப்பலில் ஏற்றப்பட்டிருந்த ஒரு வெற்று கொள்கலனில் இரகசியமாக ஏறி மலேஷியா நோக்கி பயணித்துள்ளனர்.

ஆனால், குறித்த கப்பல் மலேஷியாவை வந்தடைந்தபோது, இந்த இருவரையும் அந்நாடு பொறுப்பேற்க மறுத்தமையினால், குறித்த கப்பலின் அதிகாரிகள் பல நாடுகளுக்கு பயணித்து இறுதியாக சீனாவிற்கு வந்துள்ளனர், அங்கு சீன அதிகாரிகளால் இருவரும் கைது செய்யப்பட்டனர். கைதாகி ஒரு வருடத்தின் பின்னர் அவர்கள் இருவரையும் அங்கிருந்து நாடு கடத்த நடவடிக்கை எடுத்தனர், அதற்கமையவே கடந்த 24 ஆம் திகதியன்று அதிகாலை 05.01 மணியளவில் சீனாவின் ஷங்காய் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் இவர்கள் இருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பின்னர், கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவின் வர்த்தக மற்றும் ஆட்கடத்தல் விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் இவர்கள் கைது செய்யப்பட்டு, கொழும்பு கிருலப்பனை பிரதேசத்திலுள்ள பிரதான அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ரெப-60)

## மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு இல்லாவிட்டால் கடமையாற்றும் அதிகாரிகள் பலர் நாட்டைவிட்டு வெளியேறுவர்!

### இலங்கை மத்திய வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள திருத்தம் செய்யப்படாவிட்டால், தற்போதுள்ள மத்திய வங்கி அதிகாரிகளில் கணிசமானவர்கள் மத்திய வங்கியிலிருந்து மட்டுமன்றி நாட்டை விட்டே வெளியேறிவிடுவார்கள் எனவும் இதனால் மத்திய வங்கியின் செயற்பாடுகள் பாதிக்கப்படலாம் எனவும் இலங்கை மத்திய வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகளின் வெளியற்றம் மற்றும் அவர்களில் சிலர் உலக வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களான இங்கிலாந்து வங்கி மற்றும் பொதுநலவாய செயலக காரியாலயம் உட்பட பல சர்வதேச

2 ➤



# சனல் - 4 சுமத்திய குற்றச்சாட்டுக்கள் ஆணைக்குழுவின் முன்னேற்றமென்ன?

## எரான் விக்கிரமரத்ன எம்.பி.கேள்வி

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் சனல் – 4 சுமத்திய குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னேற்றம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை எப்போது நாடாளுமன்றுக்கும் மக்களுக்கும் கிடைக்கும் என்பதை சபைக்கு தெரிவிக்குமாறும் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் சனல் 4 சுமத்திய அதே குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமித்தமைக்கான காரணத்தை விளக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# எம்.பி. பதவியை இராஜிநாமா செய்தார் உத்திக பிரேமரத்ன

அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல நடிகருமான உத்திக பிரேமரத்ன தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்வதாகச் சபாநாயகருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

உத்திக பிரேமரத்ன 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அனுராதபுரம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

விமல் வீரவன்ச தலைமையில் நாடாளுமன்றத்தில் சுயேட்சையாகச் செயற்படும் குழுவில் தற்போது, உத்திக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய வங்கி ஊழியர்களின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களில் சேவையில் இணைந்ததன் மூலம் இது மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியானது அதன் ஆரம்ப காலத்திலிருந்தே ஒரு சுயாதீன நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதன்படி, முன்னைய நிதிச் சபை மற்றும் தற்போதைய நிர்வாக சபை ஆகியனவற்றிற்கு மத்திய வங்கி நிர்வாகம் தொடர்பான முடிவெடுக்கும் சுதந்திரம் தர்க்கரீதியான அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன, மேலும் உலகின் பிற மத்திய வங்கிகளுக்கான நிர்வாகச் சுதந்திரமும் அவ்வாறே அமைந்துள்ளது எனவும் இலங்கை மத்திய வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ரெப-59)

## போலி தரச் சான்றிதழ்களுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரசபை அவற்றை சூட்சமமாக மூடி மறைத்து விசாரணைகளை மேற்கொள்ளாமையின் மூலம் மேற்படி மோசடியானது மருந்தாக்கல் அதிகார சபைக்கு தெரிந்தே நடந்துள்ளது என துணை மருத்துவ நிபுணர்களின் குழு தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெப-61)

## வெள்ளவத்தையில் ஹோட்டலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

துப்பாக்கிச்சூடு இடம்பெற்ற இடத்தில் ரி – 56 வகை துப்பாக்கி ரவைகள் 9 மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளையில் அந்த ஹோட்டலில் எவரும் தங்கியிருக்காத நிலையில், ஹோட்டலின் சுவர் மற்றும் இரும்புத் தூண் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## விமானப் படையின் கட்டுப்பாட்டில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு வடக்கில் விமானப் படையின் வசம் உள்ள தனியார் காணிகளை விடுவிக்க விமானப் படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் பாதுகாப்புத் தேவைகளுக்கு என தேசியப் பாதுகாப்பின் கீழ் காணிகளை சுவீகரித்து அதனை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பாக தையிட்டியில் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த காணிக்குள் சட்டவிரோதமான முறையில் விகாரையை அமைத்துள்ளனர்.

அதேபோல மாதகல் விகாரைக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என கடற்படையினர் தடைவிதித்துள்ளனர். பாதுகாப்புத் தரப்பினர் ஒரு மதம் சார்ந்து செயற்பட முடியாது. அது சட்டவிரோதமானது.

மக்களிடம் கையளிக்கப்பட்ட காணிகளை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு என மீளச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

விமான நிலையத்திற்கு என முன்னர் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கே இன்னமும் நஷ்டஈடுகள் வழங்கப்படவில்லை. இந்நிலையில் மீள காணிகளைச் சுவீகரிக்க முடியாது என மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த 33 வருடங்களுக்கு மேலாக சொந்த இடங்களில் இருந்து வெளியேறி இருந்த மக்கள் தற்போதுதான் மீள அக்காணிகளில் மீள் குடியேறி, வீடுகள் கட்டியும் விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிடம் மீளக் காணிகளைச் சுவீகரிப்பதனை ஏற்க முடியாது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளோம். விமான நிலையத்திற்கு மற்றைய பக்கமான கடற்கரைப் பக்கமாக விஸ்தரிப்புக்கு காணிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் யோசனைகளைத் தெரிவித்துள்ளோம்.

எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார். அதன் போது, வலி வடக்கில் உள்ள காணிகள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நம்புகிறேன், எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். (01)

## பதவியை இராஜநாமாச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம் அன்று நான் கூறியதை சக தமிழ் இயக்கங்கள், கட்சிகள் ஏற்றிருந்தால் இன்று இந்த அழிவுகள் இழப்புகள் அவல நிலைகள் ஏற்பட்டிருக்காது என்பதையும் எடுத்துக் கூறியிருந்தேன்.

இதேவேளை நாட்டின் எதிர்கால அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் யார் ஆட்சிக்கு வருவார்கள் என்பது தொடர்பாகவும் விரிவாக இந்தியத் தூதருடன் கலந்துரையாடியிருந்தேன்.

அதைவிட மிகப்பிரதானமானது, சமீபத்தில் ஜேவிபியின் தலைவர் இந்தியா சென்று பலதரப்பட்டவர்களுடன் பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பில் பேச்சுக்களை நடத்தியிருந்தார். ஆனாலும் அவர் இலங்கை கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் எதுவிதமான கருத்தையும் எடுத்துக் கூறியிருக்கவில்லை.

அதேபோன்று சமீபத்தில் யாழ் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இந்தியத் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். அச்சந்தர்ப்பத்தில் கூட எமது வடக்கு கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பில் அதே பகுதி தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்று கூறித்திரியும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட எதுவும் தெரிவித்திருக்கவில்லை.

ஆனால் என்னுடனான சந்திப்பின்போது இந்திய மீன்பிடியாளர்களின் எல்லைமீறிய அத்துமீறிய சட்டவிரோத கடல் நடவடிக்கைகள் தொடர்பில் எடுத்துக் கூறியிருந்ததுடன், அதனால் எமது கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தேன்.

குறிப்பாக எமது கடல் வளங்கள் சுறண்டப்படுவது தொடர்பிலும் எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவது தொடர்பிலும் சுட்டிக்காட்டி அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தேன்.

ஆனால் அதை தொடர்வதற்கான அழுத்தங்கள் தொடர்ந்தும் இந்திய தரப்பிலிருந்து இலங்கை அரசின் மீது முன்னெடுக்கப்படுமாக இருந்தால் எனது அமைச்சுப் பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டு எமது கடற்றொழிலாளர்களுடன் இணைந்து போராடுவேன், என தெரிவித்தார்.

இலங்கை எல்லைக்குள் நுழைந்து சட்டவிரோத தொழில் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட மீனவர்கள் சட்டரீதியாக தண்டிக்கப்பட்டமை தொடர்பில் தமிழகத்தில் போராடடங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பில் அமைச்சரிடம் ஊடகவியலாளர் கருத்துக் கேட்டபோது,

போராட்டம் செய்வது அவர்களது உரிமை. அவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். ஆனால் சட்டரீதியாக இதைப் பார்க்க வேண்டும்.

2018 இல் இது தொடர்பான சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதில் ஒரு தடவை எல்லை மீறியிருந்தால் எச்சரிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்படுவர் என்றும் அதற்கு மேல் மீண்டும் எல்லை தாண்டியிருந்தால் சட்டரீதியான தண்டனை வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப தற்போது ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப் பத்தில் எல்லைதாண்டி உள்நுழைந்து வந்தவர்கள் சட்டரீதியாகத் தண்டிக்கப்பட்டுள்ளனர். இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புகள் அவர்களுக்குச் சுட்டுவிட்டது போலுள்ளது.

என்னைப் பொறுத்தளவில் எமது நாடு, எமது கடல், எமது மக்கள் அதற்கே எனது முன்னுரிமை என்பதாகும். அதுவே நியாயம் என்றும் கருதுகின்றேன், என்று அமைச்சர் பதிலளித்திருந்தார்.

எதிர்வரும் 3 ஆம் திகதி வடக்கு மீனவர்களால் நடுக்கடலில் கறுப்புக் கொடிப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. நான் அமைச்சராக உள்ளதால் அந்தப் போராட்டத்தில் நேரடியாகக் கலந்துகொள்ளமாட்டேன். ஒரு வேளை அதற்குள் எனது பதவியை இராஜிநாமா செய்தால் அந்தப் போராட்டத்தில் நிச்சயம் கலந்துகொள்வேன், என்றும் அவர் குறிப்பிட்டார். (01)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன கிரிக்கெட் போட்டி கிண்ணத்தை சுவீகரித்தது முதலாம் வருட மாணவரணி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் வருடம்தோறும் நடாத்தி வருகின்ற மாபெரும் உள்ளக மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இவ்வருடமும் இரண்டாவது பருவ காலமாக மிக விமர்சையாக கட்டுநாயக்க விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இளங்கலை சமூக பணி மூன்றாம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி. ரவீந்திராவின் வழிகாட்டலில் சமூகப்பணி கல்லூரியின் பணிப்பாளர் வ. ஜெயரூபன் தலைமையில் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சி.கே டி தப்பிரேவ் கண்காணிப்பில் மாணவர் நலன்புரி பணிப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் பீ.கே.எஸ் கருணாரத்தனவின் அனுமதியுடன், சமூகப் பணி விரிவுரையாளர் த.தர்சனின் ஒருங்கிணைப்பில் அண்மையில் இடம்பெற்றது.

இவ்விளையாட்டு நிகழ்வானது சிநேகபூர்வ நிகழ்வாகவே இடம்பெற்றதுடன் சமூகப்பணி இளம் கலைமாணி பட்டப் படிப்பினைத் தொடரும் மாணவர்கள், கல்விசார், கல்வி சாரா ஊழியர்கள் என 14 அணிகளைக் கொண்டதாக இரண்டு நாட்கள் இப்போட்டி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக இலங்கை கிரிக்கெட் தேசிய அணியின் முன்னாள் வீரர்களான தம்மிக்க பிரசாத் மற்றும் அஷன் சமரநாயக்க ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.




இதில் ஆண்களுக்கான போட்டியில் சாம்பியனாக முதலாம் வருட சமூகப் பணி இளம் கலைமாணி மாணவர்களும் மற்றும் பெண்களுக்கான தொடரில் சாம்பியனாக முதலாம் வருட சமூகப் பணி இளம் கலைமாணி மாணவிகளும் இவ்வருட வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கான நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் கல்விசார், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள், பார்வையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கிராம சக்தி வேலைத் திட்டத்தின் கீழ் 1.5 மில்லியன் நிதி கடன் உதவி



(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முகம்மது ஹனிபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக கிராம சக்தி தேசிய வேலை திட்டத்தின் கீழ் சம்மாந்துறை புளோக் ஜே வெஸ்ட்-2 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 32 பயனாளிகளுக்கு சுழற்சி முறையிலான நுண்கடன் வழங்கும் நிகழ்வானது பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ ஜெஸிலா தலைமையில் புலோக் ஜே.வெஸ்ட் - 2 பல் தேவைக் கட்டிடத்தில் இடம்பெற்றது.

இக்கிராமத்தில் வாழ்வாதாரத்தொழில் மேம்பாட்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட 32 பயனாளிகளுக்கும் 1.5.மில்லியன் நிதியுதவி கடனாக வழங்கப்படவுள்ளதுடன் இது நான்காம் கட்ட நிதி வழங்கல் செயற்திட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நுண்கடன் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு கடனுதவித் தொகைகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் விடயத்துக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.எம் பௌஸான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம் நியாஸ், கிராம சக்தி சங்க நிர்வாகிகள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

# புத்தளம் – முதளைப்பாளி, அல் – மினா மும்மொழி பாலர் பாடசாலை விடுகைவிழா



புத்தளம், முதளைப்பாளி, அல் - மினா மும்மொழி பாலர் பாடசாலையின் விடுகைவிழா, கடந்த வெள்ளிக்கிழமை (23) முதளைப்பாளி முஸ்லிம் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

மக்கள் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளர் Z.A.தௌபீக் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார்.

மேலும், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஆ.வு.ஆ.தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான ஆசிக், பைசல் மரைக்கார், றிபாஸ் நசீர் மற்றும் மௌலவி பஸால் சலபி, கவிக்குரல் மன்சூர், கவிஞர் முனவ்பர்கான் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், இளைஞர்கள் என பலர் கலந்துகொண்டனர்.



# காஸாவுக்குள் அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு செல்வதை இஸ்ரேல் தடுக்கிறது!

## சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு குற்றச்சாட்டு!

காஸாவுக்குள் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்லவிடாமல் இஸ்ரேல் தடுப்பதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான 'ஹியூமன் ரைட்ஸ் வோட்ச்' (எச்ஆர்டபிள்யு) குற்றஞ்சாட்டியுள்ளது.

காஸாவில் பொதுமக்கள் உயிழப்பைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் அவர்களிடம் சென்று சேர்வதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இஸ்ரேலுக்கு ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், ஹெச்ஆர்டபிள்யு அமைப்பு இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸா மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கச் செய்வது குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கடந்த மாதம் பிறப்பித்த உத்தரவை இஸ்ரேல் பின்பற்றவில்லை.

ஒரு மாதத்துக்குள் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு திங்கட்கிழமையுடன் ஒரு மாதம் நிறைவடைந்த பிறகும் அதற்கான எந்த நடவடிக்கைகளையும் இஸ்ரேல் மேற்கொள்ளவில்லை.

அதற்கு மாறாக, காஸா மக்களுக்கு மிக அவசரமாகத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருள்களையும், சேவைகளையும்கூட வழங்குவதற்கு இஸ்ரேல் தொடர்ந்து தடுத்து வருகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்குள் தரை, கடல், வான் வழியாக கடந்த ஒக்டோபர் 7 ஆம் தேதி நுழைந்த ஹமாஸ் படையினர், அங்கு சுமார் 1,200 பேரை படுகொலை செய்தனர் என்றும் மேலும், அங்கிருந்து சுமார் 240 பேரை அவர்கள் பிணைக் கைதிகளாகக் கடத்திச் சென்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

அதையடுத்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக் கட்டுவோம் என, சூளுரைத்துள்ள இஸ்ரேல், காஸா பகுதியில் வான்வழியாகவும் தரைவழியாகவும் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

இதில், பெண்கள், குழந்தைகள் என ஆயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் பலியாகி வருகின்றனர்.



இந்த விவகாரத்தில் இஸ்ரேலுக்கு எதிராக நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் அமைந்துள்ள ஐ.நா.வின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா தாக்கல் செய்த மனு கடந்த மாதம் 11 ஆம் திகதி விசாரணைக்கு வந்தது.

அந்த மனுவில், காஸாவில் ஹமாஸுக்கு எதிராக போர் நடத்துவதாகக் கூறி, பாலஸ்தீன இனத்தவர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் ஈடுபடுவதாக தென்னாபிரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. இனப்படுகொலையைத் தடுப்பதற்காக காஸாவில் நடத்தப்படும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த இஸ்ரேலுக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவில், காஸா பகுதியில், இனப்படுகொலை தொடர்பான ஐ.நா. வரையறைக்குள் வரும் எந்தவொரு செயலிலும் தங்கள் நாட்டுப் படையினர் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இஸ்ரேல் மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், இனத்தின் அடிப்படையில் பாலஸ்தீனர்களை படுகொலை செய்வது, அவர்களுக்கு உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் காயப்படுத்துவது, அவர்களது வாழ்க்கைச் சூழலை வேண்டுமென்றே திட்டமிட்டு சீர்குலைப்பது, பாலஸ்தீனர்களுக்கு மேலும் குழைந்தைகள் பிறந்து இனம் விருத்தியாவதைத் தடுக்கும் செயல்களில் ஈடுபடுவது போன்றவற்றை இஸ்ரேல் முற்றிலும் தவிர்க்கவேண்டும்.

காஸா மக்களுக்குத் தேவையான நிவாரணப் பொருள்கள் அவர்களுக்கு உடனடியாக சென்று சேர்வதையும், காஸா மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அவர்களுக்குக் கிடைப்பதையும் இஸ்ரேல் உடனடியாக உறுதி செய்யவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (04)

# பாலஸ்தீனப் பிரதமர் முஹம்மது ஷ்டய்யே தனது பதவியிலிருந்து ராஜிநாமா செய்தார்

## அமெரிக்காவின் அழுத்தம் காரணம்?

பாலஸ்தீன பிரதமர் முஹம்மது ஷ்டய்யே நேற்று தனது பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார்.

பாலஸ்தீனர்கள் வசிக்கும் காஸா பகுதியில் ஹமாஸ் படைக்கு எதிராக இஸ்ரேல் ராணுவம், தொடர் தாக்குதல்களை நிகழ்த்தி வருகிறது. இந்நிலையில், பாலஸ்தீன நிர்வாகத்தில் புதிய திருப்பமாக, பாலஸ்தீன பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக முஹம்மது ஷ்டய்யே அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன ஆக்கிரமிப்புகள் கொண்ட பிரதேசமான மேற்குக் கரைப் பகுதியில் உள்ள பாலஸ்தீன நிர்வாகம் என்றழைக்கப்படும் ஆட்சிப் பகுதியில், முஹம்மது ஷ்டய்யே தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்தது.

இந்நிலையில், பாலஸ்தீனத்தில் தனது தலைமையிலான அரசைக் கலைத்துவிட்டு புதிய அரசு பொறுப்பேற்க பிரதமர் முஹம்மது ஷ்டய்யே விருப்பம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, பாலஸ்தீன அதிபர் மகமூத் அப்பாஸிடம் தனது ராஜிநாமா கடிதத்தை அவர் சமர்ப்பித்துள்ளார்.

காஸா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் நடத்தி வரும் தொடர் தாக்குதல் எதிரொலியாக இந்த முடிவை எடுத்திருப்பதாகவும், காஸாவில் போர் முடிவுற்ற பின், அதற்குப் பிந்தைய சூழலில் பாலஸ்தீனத்தை நிர்வகிக்க புதிய அரசு அமைவதே சிறந்ததாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைந்த பாலஸ்தீன நிர்வாகத்தின் பிரதமராக முஹம்மது ஷ்டய்யே கடந்த 2019 ஆம் ஆண்டு



பொறுப்பேற்றார். இந்நிலையில், அமெரிக்காவின் கடும் அழுத்தம் காரணமாகவே பாலஸ்தீன பிரதமர் முஹம்மது ஷ்டய்யே இந்த முடிவை எடுத்திருப்பதாககள நிலைவரங்கள் தெரிவிக்கின்றன.

முஹம்மது ஷ்டய்யே தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகியிருப்பதன் மூலம், பாலஸ்தீனத்தில் அமெரிக்க ஆதரவுடன் புதிய அரசு அமையும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. (04)

# ஆப்கானிஸ்தானில் கொலைக் குற்றவாளிக்கு பொதுவெளியில் மரணதண்டனை நிறைவேற்றம்!



வடக்கு ஆப்கானிஸ்தானில் கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு விளையாட்டுத் திடலில் ஆயிரக் கணக்கானோர் முன்னிலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஓகஸ்டிலிருந்து தாலிபான்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய பின், குற்றவாளிகளுக்கு சாட்டையடி, கல்லெறிதல் மற்றும் தூக்கு போன்ற கடுமையான தண்டனைகள் பொதுவெளியில் அரங்கேற்றப்பட்டு வருவது தொடர்கதையாகிவிட்டது.

கடந்த 5 நாள்களில் 3 வது முறையாக பொதுவெளியில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் ஷீபிர்கான் நகரில் கடும் பனிப்பொழிவுக்கு மத்தியில் குற்றவாளிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதையொட்டி, முன்னெச்சரிக்கையாக, மைதானத்தை சுற்றிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

தாலிபான்களின் தலைவர் ஹிபாதுல்லா அகுந்ஸடா மற்றும் ஆப்கானிஸ்தான் நீதிமன்றங்களின் அனுமதியைப் பெற்ற பின்னரே, குற்றவாளிக்கு பொதுமக்கள் மத்தியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பதாக அந்நாட்டின் உச்சநீதிமன்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கடுமையான நடவடிக்கைகளை தொடர்ந்து கடைப்பிடித்து வரும் தாலிபான்களுக்கு ஐ.நா. சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், இது போன்ற நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள வலியுறுத்தியும் வருவது குறிப்பிடத்தக்கது. (04)

# கர்ப்பிணித்தாய்மார்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் கர்ப்பிணித்தாய்மார்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியக்கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மகப்பேற்று வைத்திய நிபுணர் பி.ஏ.டீ.எல்.ரன்சிறியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வானது மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியதுடன் வைத்தியசாலையின் பணிப்பாளரினால் தலைமையுரையானது நிகழ்த்தப்பட்டது.

அவர் தனது உரையில், எமது வைத்தியசாலை வரலாற்றில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வானது நடாத்தப்படுவது இதுவே முதல்தடவையாகும். இந்த செயலமர்வின் நோக்கம் எமது நாட்டிற்கும் சமூகத்திற்கும் சிறந்த குணம், நலம் மற்றும் பலமிக்க ஒரு குழந்தையை பெற்றெடுக்க வேண்டும் எனவும் அவர்களுடைய பங்கானது எதிர்காலத்தில் சிறப்பாக இருக்க வேண்டும்.

வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணரான பி.ஏ.டீ.எல்.ரன்சிறியின் இந்த சிறப்பான விழிப்புணர்வு நிகழ்வில் பல்வேறுபட்ட விளக்கங்களும் அறிவுரைகளும் வழங்கப்படுவதை பார்த்து, செவிமடுத்து கர்ப்பிணித்தாய்மாராகிய நீங்களும் பலனடையுமாறும் உங்களுடைய பிரச்சினைகளுக்கும் சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் அளிக்கப்படும் எனக்கூறினார்.

இந்நிகழ்வில் அதிதியாக கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி என். ரமேஸ் கலந்து சிறப்பித்திருந்தார்.

தொடர்ந்து மகப்பேற்று வைத்திய நிபுணர் பி.ஏ.டீ.எல். ரன்சிறியின் விளக்கவுரை செயலமர்வு ஆரம்பமானது.

"பொறுப்புள்ள பெற்றோர்" என்ற தலைப்பில் இந்நிகழ்வானது பல சிரமத்திற்கும் தியாகத்திற்கும் மத்தியிலும் ஒரு குழந்தையை பெற்றெடுத்து வளர்த்தெடுப்பதன் பிரதான நோக்கம் என்ன? சமூகத்திற்கு நல்ல பிள்ளையை அளிக்க வேண்டும். ஆகவே அவ்வாறான பிள்ளையின் இயல்புகள், ஆரோக்கியம், புத்திக் கூர்மை, நற்பண்பு இவற்றையெல்லாம் பிள்ளைக்கு கற்று கொடுக்க மிகவும் உகந்த காலப்பகுதியே இந்த மகப்பேற்று காலம். வயிற்றில் உள்ள பிள்ளையுடன் பெற்றோர் உரையாடுதல், சிறந்த நல்ல புத்தக வாசிப்பு, பொருத்தமான தொலைகாட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பதன் மூலமும் பிள்ளைக்கு நற்பயிற்சியை அளிக்க முடியும்.

வயிற்றில் இருக்கும் மகப்பேற்று காலத்தில் பிள்ளையானது உணரும், கேட்கும், பார்க்கும் மற்றும் உண்ணும் விதத்தை கற்றுக் கொள்ளும். அதற்காக, அம்மாவின் உடல் ஆரோக்கியம் பேண இயற்கை உணவுகளின் முக்கியத்துவமும், தகுந்த உடற் பயிற்சியும் மேலும் மகப்பேற்று நேரத்தில் உடல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம்.

மேலும் கர்ப்பகாலத்தில் ஏற்படும் பொதுவான பிரச்சினைகளான, வாந்தி, மலச்சிக்கல், வயிறு எரிவு, தசைப் பிடிப்பு, கால் வீக்கம், கால் நாளங்களில் ஏற்படும் வீக்கம் போன்றவை பற்றியும், மருந்துவம் சார்ந்த நோய்கள் பற்றியும், சக்கரை வியாதி மற்றும் உயர் குருதி அமுக்கம் ஏனைய வியாதிகள் பற்றியும், கர்ப்பகாலத்தில் ஏற்படும் இவ்வகை நோய் நிலைமை எவ்வாறு கண்டுபிடிப்பது மற்றும் அவற்றால் ஏற்படக்கூடிய பாரதூரமான விடயங்கள்.

மேலும் கர்ப்பகாலத்தில் ஏற்படக்கூடிய அவசர மற்றும் ஆபத்தான அறிகுறிகளும் விரைந்து வைத்தியசாலை வரவேண்டிய நிலைமைகள் பற்றியும் கூறப்பட்டது.

கர்ப்பம் தரித்ததில் இருந்து பிள்ளை பிறக்கும் வரை உடலில் ஏற்படும் மாற்றங்களும் பிள்ளைப்பேறு நேரத்தில் வலியைத் தாங்குவதற்கான உபாயங்களும் கற்பிக்கப்பட்டன. தாய்ப்பாலூட்டலின் முக்கியத்துவம் மற்றும் பிள்ளைப்பேறின் பின்னரான கர்ப்பத்தடை உபாயாங்களும் விளக்கப்பட்டது. மிக முக்கியமாக பிள்ளை பிறப்பின் பின்னர் ஏற்படும் மன அழுத்தம் பற்றியும் அதை தடுக்க கணவர் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களின் அரவணைப்பு பற்றி யும் கர்ப்பகாலத்தில் செய்யக்கூடிய யோகா பயிற்சிகள், மூச்சு பயிற்சிகள் பற்றியும் விளக்கப்பட்டது. வருகைதந்த கர்ப்பிணி தாய்மார்களின் சந்தேகங்களுக்கும் விளக் கமும் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மருத்துவ அதிகாரிகள், தாதிய பரிபாலகர், தாதிய பரிபாலகி, தாதிய உத்தியோகத்தர்கள், குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்கள் உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## மாதாந்த புலமைப் பரிசில் திட்டம் விண்ணப்பப் படிவங்கள் கையளிப்பு

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மற்றும் கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரிகளில் உயர்தர விஞ்ஞான, கணித பிரிவில் கல்வி பயிலும் வசதிகள் குறைந்த மாணவர்களை கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் மாதாந்த புலமைப் பரிசில் திட்டத்தில் இணைத்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை கிழக்கு நற்புறவு ஒன்றியத்தின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம்.நஸீர் உள்ளிட்ட குழுவினர் கல்முனை ஸாஹிரா தேசியக்கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் மற்றும் கல்முனை மஹ்மூத் தேசிய கல்லூரி அதிபர் ஏ.பி.நஸ்மியா சனூஸ் ஆகியோரிடம் கையளித்தனர்.



## மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கமும் கல்முனை அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாத் உலமா சபையினருக்குமிடையிலான சந்திப்பு நிகழ்வு அதிபர் எம்.எஸ்.எம். பைஸாலின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உலமா சபையின் தலைவர் அல் ஹாஜ் மௌலவி பீ.எம்.ஏ.. ஜலீல் ( பாகவி ) செயலாளர் ஏ.எல். நாஸர் ( மன்பயி ) உலமா சபை உறுப்பினர்கள், பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஏ.எம். சலாம், ஆரம்ப பிரிவி பொறுப்பாளர் முஹம்மட் நஸீம், முசாதிக் , பழைய மாணவர் சங்க செயலாளர் ஹாஜா, பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் ஹமீட் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் மாணவர்களின் ஒழுக்க விழுமிய வேலைத்திட்டங்களுக்கு பாடசாலைச் சமூகமும் உலமா சபையும் ஒருங்கிணைந்து முன்னெடுக்கப்படுப்பது சம்பந்தமான கருத்தாடல்கள் கலந்துரையாடப்பட்டு அதற்கான பல நிகழ்வுகளை நடாத்துவது பற்றியும் பேசப்பட்டது.

## அட்டாளைச்சேனையில் நல்லிணக்கச் சந்திப்பு

(எம் எப். நவாஸ்)

அட்டாளச்சேனை ஜும்மா பள்ளிவாசல் தலைவர் விரிவுரையாளர் ஏ எல்.அனீஸ் தலைமையிலான பள்ளி நிர்வாகக் குழுவினர் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு புதிதாக நியமனம் செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பி ரீ எம். இர்பானைச் சந்தித்தனர்.

நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பொதுமக்களுக்கும் செயலகத்திற்கும் இடையிலான நல்லிணக்கம் மற்றும் எதிர்கால பிரதேச அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றது.



# தடைகளை வெல்லும் தமிழ்த் தேசியம்!

## தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு



"தடைகளை வெல்லும் தமிழ்த் தேசியம்" எனும் தொனிப்பொருளில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு 25 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் இடம்பெற்றது .

தாய்மொழித் தின ஏற்பாட்டுக் குழுவின் இணைப்பாளர்களான சி.விமலேஸ்வரி, கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி மற்றும் கருணாகரன் குணாளன் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்நிகழ்வில் பல தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்கள் பங்கு பற்றி இருந்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கள விளக்கேற்றல் இடம்பெற்று தொடர்ந்து மாவீரர் ஒருவரின் தாயாரினால் ஈகைச்சுடரும் ஏற்றப்பட்டது.

கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், திருகோணமலை தென்கயிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ. சரவணபவன், ஞா. ஸ்ரீநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன் , சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

தவத்திரு அகத்தியர் அடிகளார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ· சரவணபவன், ஞா. சிறீநேசன், சி.யோகேஸ்வரன், பா.அரியநேந்திரன், கவீந்திரன் கோடீஸ்வரன், சமூக செயற்பாட்டாளர் திருமதி சசிகலா ரவிராஜ், முன்னாள் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மா. உதயகுமார், பொத்துவில் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் பார்த்தீபன், சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலன், ஊடகவியலாளர் முஸ்டீன், போராளிகள் நலன்புரிச்சங்க தலைவர் ஈஸ்வரன், சட்டத்தரணி உமாகரன், கரைச்சி பிரதேச சபை முன்னாள் தவிசாளர் வேளமாலிகிதன், சமூக செயற்பாட்டாளர் பிரகாஷ் ஆகியோர் நிகழ்வில் உரையாற்றினர். மாநாட்டின் நிறைவில் 10 அம்சங்களை கொண்ட ஒரு பிரகடனமும் முன்மொழியப்பட்டது.

பிரகடனத்தில் முன்மொழியப்பட்ட அம்சங்களாவன –

1. தமிழ்த் தேசியம் மட்டுமே தமிழரின் அபிலாசைகளை நிறைவேற்றும். அதுவே எம் இருப்பின் தாரக மந்திரமும் ஆகும் .

2. தமிழ்த் தேசிய அரசியலின் முக்கியத்துவத்தை சர்வதேச அரங்கில் அதன் எதிர்பார்க்கைகளோடும் முன் வைப்பதனை இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

3. மக்களுக்கான புதிய அரசியல் உந்து சக்தியாக இளைய தலைமுறையை முன்னிறுத்தி அரசியல் களப் பணியை சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து ஆரம்பிப்பதை இம்மாநாடு முன்மொழிகிறது.

4. ஆயுதப்போர் மௌனிக்கச் செய்யப்பட்டாலும் தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்து முன்னெடுப்புகளும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் தமிழ்த் தேசிய அரசியல் போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்ய நடைமுறைப்படுத்தப்படும் பிரித்தாளும் தந்திரோபாய வழிமுறைகள், பற்றிய விழிப்புணர்வும் இளைய தலைமுறைக்கு முன் நகர்த்தப்படுவதை இம்மாநாடு முன்மொழிகிறது.

5. ஆயுதப்போர் மௌனித்துப் போனாலும் ஒன்றரை தசாப்தம் கடந்தும் யுத்தத்தால் பாதிப்புற்று இன்றுவரை மீள முடியாத வாழ்வியல் அவலத்தில் உழலும் மக்களின் மீட்சியை உறுதிப்படுத்தவும் அவர்கள் தமது சொந்தக் காலில் நிலைபெறவும் நடைமுறைச் சாத்தியமான பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு அமுல் படுத்தப்படுவதை தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு முன்மொழிகின்றது .

6. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் தவிர்க்க முடியாத தாயக பூமியாகும். இணைந்த வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரம் அனைத்துத் தளங்களிலும் உறுதிப்படுத்தப்படுவதை இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

7. தமிழ்த்தேசிய எழுச்சியின் குரல் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் பேசும் சமூகங்களின் உரிமை, இருப்பு, அரசியல், பொருளாதாரம், கல்வி, பண்பாடு, விழுமியம், சமயம், கலை, கலாச்சாரம், இலக்கியம், ஊடகம், தொழில்வாய்ப்பு, நிலம், நிருவாகம் சார்ந்த அனைத்திலும் தனித்துவமாக உறுதிப்படுத்தப்படுவதை ஆதரித்து தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கும்.

8. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைத்து மக்களினதும் அரசியல் அபிலாசைகள் அரசியல் வியாபாரிகளின் ஏகபோகக் கட்டுப்பாட்டில் இருந்து மீட்கப்பட்டு இளைய தலைமுறையின் பங்கு பற்றுதலோடு மக்களின் குரலாக தேசிய அளவில் மாற்றப்படுவதையும் போலி தமிழ் தேசியவாதிகளின் பிடியிலிருந்து தமிழ் தேசிய அரசியலை மீட்டு அதன் தூய வடிவில் இளம் தலைமுறையிடம் கையளிப்பதையும் இம்மாநாடு ஆதரிக்கின்றது

09. துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்ட பேரவை ஸ்தாபிக்கப்பட்டு அறிவார்ந்த வழிகாட்டுதல்களை துறை சார்ந்தவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு தமிழ் தேசியத்தின் கனவுகளையும் லட்சியங்களையும் சாத்தியப்படுத்துவதற்கான சாதகமான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை இம்மாநாடு முன்மொழிகிறது

10. தமிழ் தேசத்தின் தவிர்க்க முடியாத ஜீவ நாடியாகத் திகழும் பெண்களின் பங்கு பற்றுதலை அனைத்துத் துறைகளிலும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதை இம் மாநாடு ஆழமாக முன் வைக்கிறது.






## கற்பிட்டி தில்லையூர் பாடசாலை இல்ல விளையாட்டுகள் ஆரம்பம்



(கற்பிட்டி சியாஜ்)

கற்பிட்டி தில்லையூர் அரசினர் கனிஷ்ட வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இவ்வருடத்திற்கான போட்டிகளின் ஆரம்பமாக மரதன் ஓட்டப் போட்டி இன்று காலை கற்பிட்டி பெரிய பள்ளிவாசலின் தலைவர் மௌலவி எஸ் எம்.எம் சாதிக்கினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம் அரூஸ் தலைமையில் இடம்பெற்றதுடன் பாடசாலையின் ஆசிரியர்கள், அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சம்மாந்துறை பிரதேச செயலகம் புதிய கணக்காளர் நியமனம்



(சர்ஜூன் லாபீர்)

இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த எஸ்.எல் சர்தார் மிர்ஸா சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளராக இன்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் டி.எம்.எம்.அன்சார், இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம் ரஸ்ஸான்(நளீமி), சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் ராஸீட் யஹியா, சம்மாந்துறை பிரதேச செயலக முன்னாள் கணக்காளர் ஐ.எம் பாரீஸ், அக்கரைப்பற்று பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்.ஏ.எம் தமீம், அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய கணக்காளர் ஏ.கே அஸ்கர், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல் ஆகீர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். குறித்த நியமனதாரி அக்கரைப் பற்று, தமன, காரைதீவு, அட்டாளைச்சேனை, இறக்காமம் போன்ற பிரதேச செயலகங்களிலும் கணக்காளராகக்கடமையாற்றியுள்ளார்.

## புத்தூரில் வீடு எரிந்தது!

புத்தூர் மேற்கு வளர்மதி பகுதியில் நேற்று இரவு 8 மணி அளவில் வீடு ஒன்று தீக்கிரையாகியுள்ளது. மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அண்ணாமலை மகேந்திரன் என்பவரின் வீடே இவ்வாறு முற்று முழுதாக தீயில் கருகி உள்ளது.

வீட்டில் யாரும் இல்லாத நேரம் தீப்பரவல் இடம் பெற்றுள்ளது. அன்றாடம் கூலி வேலை செய்து சிறுக சிறுக சேமித்து காணி வாங்குவதற்காக வைத்திருந்த ஒரு தொகைப் பணமும் தீயில் எரிந்துள்ளது. சம்பவ இடத்துக்கு வந்த யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் தீயினைக் கட்டுப்படுத்த முயன்ற பொழுதும் அது முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளது. மின்சார ஒழுக்கு காரணமாக இந்த அனர்த்தம் இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவித்துள்ள அச்சுவேலிப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.02.2024 இல் வெளியிடப்பெற்றது.